இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 225 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 12 – புதன்கிழமை 26 மார்ச் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 225 : Thiruvalluvar Year - 2056 - Panguni 12 - Wednesday 26 March 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## பாதிக்கப்படும் மாநிலங்களின் உரிமைகளை மீட்டெடுத்திட - நியாயமான தொகுதி மறுசீரமைப்பைப் பெற்றிட

# தமிழ்நாட்டு எம்.பி.க்களுடன் பிரதமரைச் சந்திக்க முடிவு!

## சட்டப்பேரவையில் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 26-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் காலை, "நியாய மான தொகுதி மறுசீரமைப்பு"க்கான கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் குறித்து உரை யாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பாதிக்கப்படும் மாநிலங்களின் உரிமைகளை மீட்டெடுத்திட - நியாயமான தொகுதி மறுசீர மைப்பைப் பெற்றிட தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பிரதமர் மோடி அவர்களைச் சந்தித்து வலியுறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது" என அறிவித்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், "நியாயமான தொகுதி மறுசீரமைப்பு"க்கான கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில் காலங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரக்கூடிய மரபிற்கிணங்க, "நியாயமான தொகுதி மறு சீரமைப்பு"க்கான கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் குறித்து பேரவை உறுப்பினர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

### தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதன் முதலாக தீர்மானம்!

2026ஆம் ஆண்டில் மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவிருக்கக்கூடிய தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கை தமிழ்நாட்டின் ஜனநாயக உரிமை, அரசியல் பிரதிநிதித்துவ உரிமை ஆகியவை பாதிக்கப்படும் அபாயத்தையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தியதற்காக தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் தண்டிக்கப்படக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்டி, முன்கூட்டியே எச்சரிக்கை மணியடித்தும் இந்தியாவிலேயே முதன்முதலாக நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தில் 14-2-2024 அன்று ஒருமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.3.2025) சட்டமன்றப் பேரவையில், நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சிகளுக்கு நன்றி தெரிவித்து, தமிழ்நாட்டின் உரிமையை காத்திடும் வகையில், தமிழ்நாட்டில் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களுடன் இந்தியப் பிரதமர் அவர்களை சந்திப்பது குறித்து அவைக்கு தெரிவித்து உரையாற்றினார்.

அடுத்தகட்டமாக, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தை கடந்த 5-3-2025 அன்று கூட்டி, "இந்திய நாட்டின் கூட்டாட்சி அமைப்பிற்கும், தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைக்கும் மிகப்பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய மக்கள்தொகை அடிப்படையிலான "நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பை" கடுமையாக எதிர்த்தும்,

"தற்போது இருக்கும் தொகுதி வரையறை 2026லிருந்து மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டுமென்றும்; பிரதமர் அவர்கள் நாடாளுமன்றத்தில் உறுதியளிக்க வேண்டும்; அரசமைப்புச் சட்டத்தில் அதற்குரிய சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்" எனவும், "நாடாளுமன்றத்தில் தற்போதைய உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்த்தப்படும்பட்சத்தில், 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையில் தற்பொழுது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கிடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உள்ளனவோ, அதே விகிதத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தேவையான அரசியல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தியும்",

மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டிற்கும், பாதிக்கப்படும் மாநிலங்களுக்கும் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமையை மக்களுக்கு வெளிப்படுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### கூட்டு நடவடிக்கைக் குழுவின் முதல் கூட்டம்!

நமது நியாயமான கோரிக்கைகளையும், அவைசார்ந்த போராட்டத்தையும் முன்னெடுத்துச் செல்லவும், ஒன்றிய அரசிற்கு மாநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், "கூட்டு நடவடிக்கை குழு" ஏற்படுத்தவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்கான முன்னெடுப்பில் மிகத்தீவிரமாகச் செயல்பட்டு 22-3-2025 அன்று அந்தக் கூட்டுக் குழுவின் முதல் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள், தெலுங்கானா மாநிலத்தினுடைய முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள், பஞ்சாப் மாநிலத்தினுடைய முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள், கர்நாடக மாநிலத்தினுடைய துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் அவர்கள் உள்ளிட்ட முக்கிய கட்சித் தலைவர்கள் நேரில் பங்கேற்க, ஒடிசா மாநிலத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் நவீன் பட்நாயக் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகக் கலந்து கொண்டார்.

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

## காவிரி – வைகை – குண்டாறு இணைப்புத் திட்டம்; எங்கள் தலைவர் கலைஞரால் ஆரம்பிக்கப்பட்டது! அந்தத் திட்டத்தை – கலைஞரின் மகன் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முடித்துக் காட்டுவார்!

# மேகதாதுவில் ஒரு போதும் அணை கட்ட முடியாது!

## சட்டப்பேரவையில் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அடுக்கடுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு உரை!

**சென்னை, மார்ச் 26-**

**தமிழ்நாடு சட்டப்பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், நீர்வளத் துறை மற்றும் இயற்கை வனத்துறை மான்யத்தின் கீழ் பதிலளித்துப் பேசினார்.**

**அப்போது பேசும்போது, துறையின் சார்பில் அடுக்கடுக்காக பல்வேறு அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.**

**அறிவிப்புகளுக்கு நடுவே, மேக தாதுவில் எந்தக் கொம்பனாலும் அணைக் கட்ட முடியாது என்று அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஆணித்தரமாகக் குறிப்பிட்டார்.**

**அத்துடன் நீர்வளத்துறையில் முக்கியமான சில அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார்.**

சட்டப்பேரவையில் நேற்று, முன்தினம் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், தமது மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரை வருமாறு:

இந்த மாமன்றத்தில் நான் நீண்ட நெடுங்காலமாக உறுப்பினராக இருந்தாலும், இந்த அவையிலே ஏழு முறை இந்த இலாகாவினுடைய அமைச்சராக இருந்து நீர்ப்பாசனத் துறை குறித்த மானியக் கோரிக்கைமீதான விவாதத்திலே பதிலுரையாற்றியிருக்கின்றேன்.

ஒரு சாதாரண கிராமத்தில், அங்கு பள்ளிக்கூடம் கிடையாது, ரோடு கிடையாது, light கிடையாது, நடைபாதை வழியாகத்தான் ஊருக்குப் போகமுடியும், ஆந்திர எல்லையிலுள்ள ஒரு மலை அடிவாரத்தில் இருந்த என்னை, இந்தளவிற்கு ஆளாக்கி, அறிவூட்டி எனக்கு ஆசானாகத் திகழ்ந்த தலைவர் கலைஞர் அவர்களை நினைத்து (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே நிற்கிறேன். அவருடைய ஆட்சிக் காலத்தில், நான் பொதுப் பணித் துறை குறித்த மானியக் கோரிக்கையில் ஆறுமுறை பதிலளித்துப் பேசியிருக்கிறேன்; இன்றைக்கு ஏழாவது முறையாகப் பதிலளிக்கிறேன். எனக்கு அதே பாக்கியத்தை வழங்கிய என்னுடைய தலைவர், தமிழ்நாடு முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) தளபதியார் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அவையில் எல்லோரும் பேசுகிற போது, நான் உடனுக்குடன் பதில் சொல்லியிருக்க முடியும். ஆனால், உறுப்பினர்களுக்கு முழுமையாகப் பேசுவதற்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று நினைக்கிறவன் நான். ஒரு கருத்தைச் சொன்னால் அந்தக் கருத்திற்கு பதில் சொல்லக்கூடிய திறமை, வாய்மை நமக்கு இருக்கிறது. ஆகையால், அதில் அவசரப்படக்கூடாது என்பது ஒன்று; இரண்டாவது, இது கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பேச வேண்டிய இலாகா. கொஞ்சம் மாறினாலும் தவறாகப் போய்விடும்.

### உரிமை மறுக்கப்படுகிறது!

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நாம் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தண்ணீர் வாங்குகிறோம்; கேரளாவிலிருந்து தண்ணீர் வாங்குகிறோம், கர்நாடகாவிலிருந்து தண்ணீர் வாங்குகிறோம் என்று சொன்னார்கள்; அது நியாயம்தான். அவ்வாறுதான் நம்முடைய நிலைமை இருக்கிறது. நம்முடைய நாட்டிலே பிறந்து ஓடுகிற ஒரே நதி நெல்லையில் ஓடும் அந்தவொரு நதிதான். இந்த மூன்று மாநிலங்களிலிருந்து நாம் தண்ணீரைப் பெறுகிறோம். அவற்றில் நமக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அந்த உரிமை மறுக்கப்படுகிறது. அதற்காகப் போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கிறது. மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் ஆண்டுக்கணக்கில் நின்று கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில், நாம் எப்படியும் தண்ணீரைப் பெற்றாக வேண்டும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.3.2025) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் 2025–2026 ஆம் ஆண்டிற்கான நீர்வளத்துறை மற்றும் இயற்கை வளங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.